**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 116/2022**
**Dated :29.04.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார விஜயன் | வயது | : | 38 |
| தந்தை பெயர் | : | ராமமூர்த்தி | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | வீரடிப்பட்டி | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கந்தர்வகோட்டை தாலுகா வீரடிப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03.05.2019 ஆம் தேதி வீரடிப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். அன்றைய தினம் காலை சுமார் 10.00 மணியளவில் குழந்தைகள் நல அலுவலகத்தில் இருந்து எனக்கு போன் மூலமாக வீரடிப்பட்டி கிராமத்தில் உள்ள பிச்சையா மகன் முருகானந்தம் கொல்லையில் சிறு குழந்தைகளை தொழிலாளர்களாக வைத்து வேலை வாங்கி வருவதாக தகவல் சொன்னார்கள். நான் காலை சுமார் 10.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். அங்கு சென்று விசாரித்த போது முருகானந்தம் கொல்லையில் 6 குடும்பங்கள் இருந்தார்கள். அவர்களிடம் விசாரித்த போது அவர்களை கடலூர் மாவட்டம் பண்ருட்டியைச் சேர்ந்த கங்காணி பாவாடை மகன் மகாதேவன் என்பவர் அவர்களை அழைத்து வந்து கொத்தடிமைகளாக வைத்து வேலை வாங்கியதாக சொன்னார்கள். அவர்களிடம் போன் நம்பர் வாங்கி மேற்படி மகாதேவன் என்பவருக்கு தகவல் சொன்னதன் பேரில் அவரும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்.

அதில் பெரியவர்களில் ஆண்கள் 10 நபர்கள் இருந்தார்கள். இளவர் ஆண் குழந்தைகள் 10 நபர்கள் இருந்தார்கள். பெண்கள் பெரியவர்களில் 12 நபர்கள் இருந்தார்கள். பெண் குழந்தைகள் 7 நபர்கள் இருந்தார்கள். மொத்தம் 39 நபர்கள் இருந்தார்கள். நான் சென்று பார்த்த போது அனைவரும் கரும்பு வெட்டி கொண்டிருந்தார்கள். சில குழந்தைகள் குடிசைகளில் இருந்தார்கள். சில குழந்தைகள் பெற்றோருக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். நான் பார்த்தபோது மேற்படி நபர்கள் போதிய உணவு

இல்லாமல் சரியான ஊட்டச்சத்து இல்லாமல் இருந்தார்கள். பின்னர் கந்தர்வகோட்டை வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோருக்கு தகவல் சொன்னேன். கந்தர்வகோட்டை வட்டாட்சியர் கந்தர்வகோட்டை காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். அதன் பிறகு, அவர்களை மீட்டு ஒரு வேன் மூலமாக அவர்களது ஊருக்கு அனுப்பி வைத்தோம். பின்னர், இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். (மேற்படி புகார் மனு அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

மறுவிசாரணை- இல்லை.

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.29 16:39:05 +0530

என்.சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.